**COS No.23/2025**

**PW–1 –சந்திர சேகர்**

**த/பெ.**

**நாள். 07.08.2026.**

**<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1.நான் வாதி நிறுவனத்தின் பங்குதாரர் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு மற்றொரு பங்குதாரரிடம் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். பிரதிவாதி நிறுவனத்திற்கு என்னென்ன பொருள்கள் அனுப்பினார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். எனக்கு எந்த விவரமும் நேரடியாக தெரியாது என்றும் அலுவலக கோப்புகள் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வியாபாரம் சம்பந்தமாக எங்களுக்கும், பிரதிவாதி நிறுவனத்திற்கும் எழுத்து மூலமாக ஒப்பந்தம் உள்ளதா என்றால் இல்லை.

2.**வா.சா.ஆ–3** ஆவணத்தில் பிரதிவாதியின் கையொப்பம் எதுவும் இல்லை என்றும், நாங்களாகவே அந்த ஆவணங்களை தயாரித்துக் கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. **வா.சா.ஆ–4** ஆவணங்கள் எங்களுடைய கணினியில் உள்ள விவரங்கள் என்றும், அந்த விவரங்கள் பிரதிவாதிக்கு தெரியாது என்று சொன்னால் அதற்கான விபரங்களை பிரதிவாதிக்கு அனுப்பி உள்ளோம். **வா.சா.ஆ–8** ஆவணம் அனைத்தும், அசல் ஆவணங்கள் அல்ல என்று சொன்னால் அந்த அசல் ஆவணங்கள் பிரதிவாதி வசம் தான் இருக்கும். ஒரு பொருள் விற்பனை செய்து விட்டால் அந்த பொருள் பிரதிவாதி வசம் சென்று விட்டது என்பதை காண்பிக்க இன்வாய்ஸ் எங்கள் நிறுவனத்திற்கு திரும்ப வரும் என்று சொன்னால் பிரதிவாதி அவரது வாகனம் மூலமாக சரக்குகளை எடுத்து வருவதால் அவ்வாறு வராது. நான் தாக்கல் செய்துள்ள **வா.சா.ஆ–8** சேப் எக்ஸ்பிரஸ் ரசீதுகள் பிரதிவாதிக்கு சம்பந்தப்பட்டவை அல்ல என்றால் அவர்கள்

சொல்லித்தான் அந்த நிறுவன மூலமாக சரக்குகளை அனுப்பினோம். அந்த ஆவணங்கள் மோசடியாக தயார் செய்யப்பட்டதால் தான் அசல்களை தாக்கல் செய்யாமல் ஒளிப்பட நகல்களை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

3. **வா.சா.ஆ–7–ல்** பக்கம் எண்.3 முதல் பக்கம் எண்.8 வரையிலான விபரங்கள் அனைத்தும் பிரதிவாதி நிறுவனம் பணம் பெற்றுக் கொண்டதற்கான விபரங்கள் என்று சொன்னால் சரிதான். வாங்கிய சரக்குகளுக்கு பிரதிவாதிகள் அனைத்தையும் தீர்த்து விட்டார்கள் என்றும் அதற்கான ஆவணம் தான் **வா.சா.ஆ–7** என்றும் எந்த விதமான பாக்கியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனம் நாங்கள் பொருள் கொடுக்கும் போது இருந்த முகவரியில் தற்போது இல்லை என்றும் அவர்கள் முகவரி மாறிவிட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. அந்த விவரம் தெரிந்தும் நான் பழைய முகவரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதால் தான் பதில் அறிவிப்பு அனுப்ப முடியவில்லை என்றால் சரியல்ல.

4.பாக்கியத்தொகை சம்பந்தமாக பிரதிவாதி நிறுவனத்திற்கு எந்த விவரமும் சொல்லவில்லை என்றால் இ–மெயில் அனுப்பி உள்ளோம். அந்த இ–மெயில் ஸ்டேட்மெண்ட்களை நீதிமன்றத்தின் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்களுடைய ரசீதுகள் பல்வேறு மாநிலங்களில் உள்ள பல்வேறு கிளைகளுக்கு பொருள் அனுப்பியதாக காணப்படுகிறது என்றால் சரிதான். அவர் எந்த கிளைக்கு அனுப்ப சொல்கிறார்களோ அந்த கிளைக்கு அனுப்பினோம்.

<u>**பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைத் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**</u>

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

H.Mohamed Ansari
Digitally signed by H.Mohamed Ansari
Date: 2026.08.07 14:38:06 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.